**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண். 2188/ஆ5/2023, நாள்.10.08.2023**

•••••

பொருள் பள்ளிக் கல்வி – சிறார் மற்றும் ஆசிரியர் இதழ்கள் பணி – மாவட்ட ஒருங்கிணைப்பாளர் / ஆசிரியர்கள் – சார்ந்த பணிகள் நிர்ணயித்தமை – தொடர்பாக

பார்வை
1. அரசாணை (நிலை) எண். 108, பள்ளிக்கல்வித் (பக5(1)) துறை நாள். 22.06.2022
2. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.19538/எம்/இ2/2022,

•••••

பார்வையில் காணும் அரசாணையின் படி பள்ளிக்கல்வித் துறையின் வாயிலாக ஜனவரி 2023 முதல் 6 முதல் 9ம் வகுப்பு பயிலும் மாணாக்கருக்காக "தேன்சிட்டு" இதழ் அனைத்து அரசு நடுநிலை / உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளுக்கும் வகுப்பறைக்கு ஒன்று என்ற முறையிலும் ஆசிரியர்களுக்கான "கனவு ஆசிரியர் " இதழ் பள்ளிக்கு ஒன்று என்ற விதத்திலும் அனைத்து அரசுப் பள்ளிக ளுக்கும் அஞ்சல் வழியாக அனுப்பப்பட்டு வருகிறது.

இதே போன்று ஜூன் 2023 முதல் 4 மற்றும் 5ம் வகுப்பு மாணாக்கருக்காக "புது ஊஞ்சல்" அனைத்து அரசு தொடக்க / நடுநிலைப் பள்ளிகளுக்கும் வகுப்பறைக்கு ஒன்று என்ற வகையில் அனுப்பப்பட்டு வருகிறது.

சிறார் மற்றும் ஆசிரியர் இத ழ்களில் அரசுப் பள்ளி மாணவர்களின் ஓவியங்கள் , கவிதைகள், கதைகள், கட்டுரைகள் உள்ளிட்ட படைப்புகளையும் ஆசிரியர்களைப் பற்றிய செய்திகளையும் திரட்டுவதற்காகவும் அரசுப் பள்ளிகளில் இவ்விதழ்களின் ஆக்கப்பூர்வமான பயன்பாட்டினை உறுதிசெய்வதற்காகவும் ஒவ்வொரு மாவட்டத்திலும் பள்ளிக்கல்வித்துறையின் சிறார் மற்றும் ஆசிரியர் இதழ்களின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களை (ஆசிரியர்கள்) நியமித்து அவர்களுக்கான பணிகளை நிர்ணயித்து பார்வை 2–ல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளில் பட்டியலிடப்பட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலூர் மாவட்டம் சார்பாக கீழ்காணும் ஆசியர்கள் ஒருங்கிணைப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

| வ. எண். | பெயர் மற்றும் பதவி திருவாளர்கள் | பணிபுரியும் பள்ளியின் பெயர் |
|---|---|---|
| 1 | குமரன்,<br>பட்டதாரி ஆசிரியர் | அரசு (ஆ) மேல்நிலைப் பள்ளி ,<br>காங்கேயநல்லூர் |
| 2 | அருண் மனோகர்,<br>இடைநிலை ஆசிரியர் | ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி ,<br>தட்டான்குட்டை |
| 3 | சிலம்பரசி,<br>இடைநிலை ஆசிரியர் | ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள் ளி,<br>மேல்மொணவூர் |

எனவே, மேற்காண் குறிப்பிட்டுள்ள ஒருங்கிணைப்பாள ர்கள் இப்பொருள் சார்பாக தங்கள் பள்ளியினை அணுகும்போது முழுஒத்துழைப்பு நல்லுகுமாறு அனைத்து அரசு தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

//ஒப்பம்//

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசிரியர்கள்,
அனைத்து அரசு தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்
நகல் –

1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

2. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலைக் கல்வி)
   வேலூர் மாவட்டம்.
3. மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி)
   வேலூர் மாவட்டம்.
   (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)